1972 ஆகஸ்ட் 10]

திரு. ஆ. முனியாண்டி : இதே அணைக்கட்டின் கீழ் வரக்கூடிய பொட்டைக் குளம் கால்வாய் இருக்கிறது. அதற்கு மடை திருப்பி பாசன வசதியை ஏற்படுத்தித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேவையானபொழுது ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் அதிக நீர் தேக்கி வைக்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே இந்த மஞ்சளாறு திட்டத்திலிருந்து சிலுவார்ப்பட்டி போன்ற கிராமங்களுக்கும் பாசனத்திற்காகத் தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பற்றிய அறிக்கையைத் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்று அதைப் பரிசீலித்தபின்னர் ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மஞ்சளாறு அணைக்கட்டிலிருந்து மட்டப்பாறைக் கண்மாய்க்குத் தண்ணீர் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியாக இதுபற்றிய கேள்வியினைக் கொடுத்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

வேப்பிலை கிராமத்திற்குப் புதிய ஏரி

** 47 வினா—திரு. வி. செல்லதுரை :* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், வேப்பிலை கிராமம், கோவிந்தாபுரம் சர்வே எண் 190-ல் புதிதாக ஒரு ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையிலுள்ளது.

அணைக்கட்டுகள்

** 48 வினா—திரு. சி. இராமநாதன் :* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் பாம்பாற்றின் குறுக்கே களபம் அருகில் அணை ஒன்றினைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.